Source: *Tamil Murasu,* p2
Date: 25 April 2023

# இரைப்பைப் புற்றுநோயாளிகளின் கதிரியக்க சிகிச்சைக்கு உதவும் 'மாத்திரை'



இரப்பைப் புற்றுநோயாளிகளின் கதிரியக்க சிகிச்சைக்கு உதவும் இயந்திரவியல் பாகங்களை உள்ளடக்கிய 'மாத்திரை' (படம்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நோயாளிகள் உட்கொள்ளும் இந்த மாத்திரை துல்லிய அளவிலான கதிரியக்கம் மூலம் உடலுக்குள் உள்ள புற்றுநோய் அணுக்களை அழிக்கும். இதற்குமுன் அதிக சக்திவாய்ந்த கதிரியக்கத்தைக் கொண்டு புற்றுநோய் அணுக்கள் அழிக்கப்பட்டன.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் (என்யுஎஸ்) வேதியியல் துறை அறிவியலாளர்கள் குழு, என்யுஎஸ் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியின் ஆய்வாளர்கள், சீனாவின் சிங்ஹுவா பல்கலைக்கழகம், ஷென்சென் மேம்பட்ட தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியால், ஒரு டோசிமீட்டரை இந்த மாத்திரைக்குள் உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. 1.8 செண்டிமீட்டர் நீளமும் 0.7 செண்டிமீட்டர் அகலமும் கொண்ட இந்த மாத்திரை, சந்தையில் விற்கப்படும் மிகச் சிறிய வடிவங்களில் ஒன்று என்று கூறினார் இந்தத் திட்டத்துக்குத் தலைமையேற்ற என்யுஎஸ் பேராசிரியர் லியு சியாவ்காங்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.